



ST. ANNE'S GENERALATE
Madavaram | Chennai - 600 060
Tamilnadu | India

AUGUST 2023

AGNL

Volume : 03 Issue : 05


## MONTHLY RECOLLECTION - AUGUST, 2023

## (Bearers of Christ - Givers of life through) LIVING GENUINELY THE CHARISM OF OUR CONGREGATION

### The living Charism of our Foundress

Charism is the personality of a religious Congregation bequeathed by the one who founded the Congregation. According to the Second Vatican Council, this charism is "the spirit and aims of each founder which should be faithfully accepted and retained" (Perfectae Caritatis, 2). The beautiful charism that we derive from our Foundress Servant of God Mother Gnanamma is "Fullness in God and Service in Simplicity".

### Jesus with a new paradigm in life and mission

Jesus presented to the world an entirely new perspective on life. It represented more than a religion or a way of living. He presented a new paradigm that redefined the world in which we live. Let us see what are the paradigms on which our Lord and Master Jesus Christ worked or what paradigms He promoted through His life and ministries:

### 01. Racial unity



In the parable of "The Good Samaritan" (Luke 10: 25-37), Jesus presents the Samaritan as the symbol of genuine human concern and compassion. That Samaritan had gone to the rescue of the wounded setting aside all man-made restrictions, in a society where racial discrimination was the order of the day.

In John 4:7-30, Jesus' stand against untouchability is conveyed through this narrative, where Jesus communicates respect and solicits the hospitality of the Samaritan woman. It is remarkable that Jesus takes the intuitive being of a Jew to break the so-called sacred traditions established by the self-righteous scribes and chief priests.

### 02. Empowerment of women

Jesus gives public recognition to the woman who had offered her devotion and love to him, irrespective of the formalities and protocol upheld in a male-dominated society during his days (Mt 26:6-13). While the disciples went to different parts of the world to preach the Gospel and proclaimed 'Jesus as the expected Messiah,' the woman of Samaria went to her own village, where everybody knew her past sinful life. She

dared to declare 'Come, see a man, who told me all that I ever did. Can this be Messiah? (Jn 4-29). Here the passage brings to light that the woman of Samaria was the first missionary to the Samaritans, presenting her as proof of Christ's transforming power. John 20:1-18, Mary Magdalene out of whom Jesus had cast out seven demons (Lk 24:1-9). Further, Jesus had commissioned her as the first Apostle of his resurrection and directed her to declare that good news to his disciples (Jn 20:17). Through Mary Magdalene's announcement, the need for evangelism within the Church is brought to focus.

### 03. Importance of the little ones

Jesus gives importance to the children (Lk 18: 16). In the adult dominion world, many times children are neglected. But Jesus affirms that children are the inheritor of the Kingdom of God.

### 04. Compassion for the suffering and neglected ones

Jesus addresses the problems of the suffering and neglected people. This is illustrated in Jesus' compassionate response to the woman who was suffering from a haemorrhage for twelve years (Lk 8:43-48) and his healing of the blind Bartimaeus on Jericho Road (Mk 10:46-52).

### 05. Periphery to the center

During the time of Jesus, people attributed any physical aliment or untimely death to one's sin or the sins of his/her ancestors (Lk 13:2-5; Jn 9:2). The sick especially those afflicted with leprosy were treated as unclean and outcastes. But, Jesus's approach was one of compassion and love that reaches out to those who were forced to lead sub-human lives. This is exemplified by Jesus' healing the leper and his instruction to the leper to, 'Go show yourself to the priest, offer for your cleansing what Moses commanded for a proof to the people' (Mk 1:44b). Thereby, Jesus paved way for the one who was pushed to the periphery to come to the centre and affirm him/herself (Mt 8:2-4; Mk: 1:40-45; Lk 5:12-14).

### 06. Master-Servant Relationship



Jesus introduced a culture contradictory to that of the dominant society. It was evident in the way he related with his disciples. During the Passover meal in the upper room, Jesus knelt and washed the feet of his disciples (Jn12:2-15). This universal of roles was an important feature of Jesus's counterculture.

### 07. Love, the greatest Law

Jewish leaders such as Sadducees and Pharisees took advantage of Mosaic Law and started corruption in the name of temple collection, offerings, etc. They themselves interpreted the law for their benefit. There was an argument between Jesus and the Pharisees regarding Sabbath (Mt 12:1-14) as Jesus broke many times the law of the Sabbath (Mk 2:27-28), in conclusion, Jesus emphasized that Love is more important than human law.

### 08. Forgiveness

Jesus introduces God as a forgiving father. He taught through the parable of the forgiving father waiting for the lost son (Lk 15:11-32), He taught his disciple to pray and ask for forgiveness (Lk 11:1-4), and he himself prayed on the Cross and ask God to forgive the people who don't know what they are doing (Lk 23:32-43).

### Walking with Mother Gnanamma who brought a new paradigm shift in her context




During Mother Gnanamma's time, the education of young girls was an impossible dream. Mother Gnanamma kept constantly in touch with the illiterate girls in the locality and identified education as a principal means of empowering them. For the vision to materialize, she started a school exclusively for girls in Kilacheri in 1863. Starting a school exclusively for girls was a paradigm shift during the time of Mother Gnanamma. Our predecessors too were true to the charism, vision, and mission of our Foundress by responding to the needs of the poor people in remote villages in India. We do have the same responsibility and alertness to keep the fire of the charism and vision of our Foundress alive by rendering services to those we identify as marginalized and needy in the places we are based at.

### Becoming Christ-like today challenging the anti-Gospel values of the society

Our country suffers from various social issues. The following are some of the social issues in India: caste, child labour, illiteracy, gender inequity, superstitions, religious disputes, pollution, the safety of women, corruption, high unemployment and many others. The time has come to an end to these terrible social ills. No doubt several challenges confront us today. The impact of politics and government policies on our lives and ministries is greater than ever. The BJP-led Government continues to assert its self-proclaimed Hindutva politics in a democracy where we feel the heat of an increasingly intolerant majority.

However, politics is not the only challenge we face. In fact, the bigger challenge comes from within us today. Broken communities, consumeristic worldly life, faithless ministry and godlessness in lifestyle are more common than one would imagine. If we continue to be like this, we will run the risk of becoming obsolete and irrelevant to society, the church and the people who expect our help for their development.

### We need a new paradigm in life and mission

Today, to make our religious life both relevant and meaningful, we need to revisit our Foundress with the new sensitivities of today. The realities of today's society affect the lives of the consecrated people. As a consequence, consecrated life is facing vocational, moral, psychological, pastoral and spiritual crises. We are demanded constantly to go beyond our Foundress' vision and mission and get involved continually in discerning the needs of our times and actively responding to them. Our lives are underpinned by a set of paradigms which we rarely, if ever, think about, question or challenge. We need to understand this basic call to our consecrated life. In this situation, the following becomes very important in order to bring a new paradigm shift in our life and ministries:

- Undertaking ministries and actions for social improvement.
- Making our lives more relevant and effective today.
- Bringing newness into our ministerial life by having variety of approaches in our ministry.
- Plunging more and more into the lives of the people to identify Christ among them.
- Renewing our basic call of being sent to the peripheries to carry out the mission of Christ.

## Group discussion

01. Creating paradigm shifts is the need of the hour. As change agents, we are committed to the well-being of people. Do we aware of this urgency?
02. Are we witnessing the emergence of a new paradigm shift in our life and ministry today?
03. What are the important changes that we can bring into our life and mission immediately today so that both life and mission become relevant and meaningful?
04. What are our immediate priorities and changes in life and the mission of our community?

## மாத ஆய்வுநாள் - ஆகஸ்டு, 2023

### இறைஉறவில் வளர்வோம், இறைமக்களுக்காய் வாழ்வோம்
### சபையின் தனிவரத்தை வாழ்வாக்குவோம்

### *நம் சபைநிறுவுனர் இறைஊழியர் அன்னை ஞானம்மாவின் தனிவரத்தை, ஆன்மீகத்தை வாழ்வாக்குதல்*

ஒரு சபையின் தனிவரம் என்பது அச்சபையின் தனித்தன்மையையும், அதன் ஆன்மீகத்தையும் உள்ளடக்கியதாக அமைகிறது. இது அச்சபை நிறுவுனரின் ஆன்மீகம் மற்றும் தொடக்கக்கால தூண்டுதல் மற்றும் முன்னோர்களின் வாழ்வு நெறிமுறைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டது (சபை ஏற்பாடுகள் 01:3). இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (தழுவியமைத்த துறவற வாழ்வை புதுப்பித்தல்) சபை நிறுவுனரின் உள்ளுயிர் மற்றும் தொடக்கக்கால நோக்கங்கள் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனை பிரமாணிக்கமாக பின்பற்றுவர் என வலியுறுத்துகிறது. நமது சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை ஞானம்மா அவர்களின் ஆன்மீகம் மற்றும் வாழ்வு நெறிகளிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட தனிவரமே "இறைவனில் நிறைவு, எளிமையில் சேவை" என்பதாகும்.

இறைமகன் இயேசு புதிய வாழ்வியல் நெறிமுறையினை நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார். தாம் வாழ்ந்த காலத்தின் வாழ்வுநெறிமுறைகளை மீள்பார்வைக்கு உட்படுத்தி, ஒரு புதிய வாழ்வு நெறிகளை நம்முன் படைக்கின்றார். அவர் தமது வாழ்வு மற்றும் போதனைகள் மூலம் அறிமுகப்படுத்திய இப்புதிய வாழ்வு நெறிமுறைகளின் கூறுகளை நாம் ஒவ்வொன்றாக காண்போம்.

### *01. இனம் கடந்த ஒற்றுமை*

நல்ல சமாரியன் உவமையிலே (லூக் 10: 25-37) இறைமகன் இயேசு சமாரியனை உண்மையான மனிதாபிமானம் மற்றும் இரக்கத்தின் அடையாளமாக நம்முன் படைக்கின்றார். அன்றைய கால சமுதாயம் ஏற்படுத்திய குறுகிய தடைச்சுவர்களை எல்லாம் கடந்து சென்று, அடிபட்டு, குற்றுயிராய் கிடக்கும் மனிதனை காப்பாற்றுகின்றார். இந்த நல்ல சமாரியனையே, இனம் கடந்த மனுகுல ஒற்றுமைக்கு முன்னுதாரணமாக இறைமகன் இயேசு தமது போதனையில் எடுத்துக் காட்டுகின்றார்.

மற்றொரு நிகழ்விலே (யோவா 4:7-30) தீண்டாமைக்கு எதிரான தனது நிலைப்பாட்டை உறுதி செய்கின்றார். இந்நிகழ்விலே இறைமகன் இயேசு சமாரிய பெண்ணிற்கு மரியாதை அளிப்பதோடு மட்டுமில்லாது அவரின் சேவையையும், உபசரிப்பையும் பெற்று கொள்கின்றார். யூத இனத்தை சார்ந்தவரான இயேசு தாமே முன் சென்று, தன்னைத்தானே நேர்மையாளர்கள் என சொல்லிக்கொள்ளும் முதன்மை குருக்கள் மற்றும் பரிசேயர்களால் நுணுக்கமாக பின்பற்றப்படும் சமூக கட்டுகளை உடைத்தெறிகின்றார். இறைவன்முன் அனைவரும் சமம் என்ற சமத்துவ சிந்தனையை நமக்கு உணர்த்துகின்றார்.

### *02. பெண்கள் மேம்பாடு*



ஆண் ஆதிக்க யூத சமுதாயத்திலே, அவர்கள் ஏற்படுத்திய சட்ட முறைகளுக்கு மாற்றாக இப்பெண் செய்த செயலை (மத் 26:6-13) இறைமகன் இயேசு கூட்டத்தின்முன் அங்கீகரித்து, பாராட்டுகின்றார், அதனை ஏற்றுக்கொள்கின்றார். இயேசுவின் சீடர்கள் உலகின் பல இடங்களுக்கும் சென்று நற்செய்தியை போதிக்கும் பொழுது, இயேசுவின் உரையாடலால் மனமாற்றம் பெற்ற இச்சமாரியப்பெண், தனது பாவ வாழ்க்கையை நன்கு அறிந்த தனது கிராமத்திற்கே சென்று, தான் செய்த அனைத்தையும் எனக்கு சொன்ன இம்மனிதரை காண வாருங்கள். இவரே நாம் எதிர்பார்க்கும் மெசியா என கூறி அனைவரையும் இயேசுவிடம் அழைத்து வருகிறாள் (யோவா 4: 29). இவ்விவிலிய பகுதி, இச்சமாரியப் பெண்ணை, சமாரிய மக்களுக்கு இயேசுவை அறிவித்த மறைபோதகர் என வெளிச்சமிட்டு காட்டுகின்றது. இறைமகன் இயேசுவின் மனமாற்றும் சக்தினையும் நமக்கு எடுத்து கூறுகின்றது. மகதலா மரியாவிடமிருந்து தீயஆவியை ஓட்டிய இயேசு அவரை பலப்படுத்தி, தம் உயிர்ப்புக்கு சாட்சியாக்கி, தனது சீடர்களுக்கு தனது உயிர்ப்பின் செய்தியை அறிவிக்க பணித்தார்(யோவா 20:17). இவரின் மூலமே இயேசுவின் உயிர்ப்பு செய்தி திருஅவை முழுவதிற்கும் அறிவிக்கப்பட்டது.

### *03. 'சிறியோர்களின்' முக்கியத்துவம்*

குழந்தைகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாத, ஆண்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்ட யூத சமுதாயத்திலே, சிறியோர்களுக்கு இயேசு முன்னுரிமை அளிக்க குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், ஏனெனில் இவர்களே இறையரசுக்கு உரியவர்கள் என்றார் (லூக் 18: 16).

### *04. துன்புறுவோர் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்கள் மேல் கரிசணை*

திருவிவிலியம் முழுவதும் இறைமகன் இயேசு துன்புறுவோர் மற்றும் விளிம்பு மக்கள் சந்திக்கும் சவால்களுக்கு பதிலளிப்பதை காண்கின்றோம். 12 ஆண்டுகள் பெரும்பாட்டினால் துன்புறும் பெண்ணை குணப்படுத்துகின்றார் (லூக் 8: 43-48). மேலும் எரிக்கோ நகர் தெருவிலே பார்த்தலேமேயு என்ற குருடனை குணப்படுத்துகின்றார். அவர்கள் இழந்த உடல்நலத்தோடு, மனித மாண்பையும் மீண்டும் பெற உதவுகின்றார்.

### *05. விளிம்பிலிருந்து மையம் நோக்கி*

யூத கலாச்சார பின்னணியில் தீரா உடல்நோய், உடல் ஊனம், குறுகிய காலத்தில் இறப்பு, வறுமை போன்றவைகள் அவர்களின் பாவம் அல்லது அவர்களின் முன்னோர் செய்த பாவத்தின் விளைவு மற்றும் கடவுளின் சாபம் என எண்ணினர் (லூக் 13: 2-5, யோவா 9:2). எனவேதான் தொழுநோயாளிகளை தூய்மையற்றோர் என கருதி அவர்களை நகரைவிட்டு வெளியே தள்ளினர். ஆனால் இறைமகன் இயேசு அவர்கள் மீது அன்பும், கருணையும் கொண்டார். மனித மாண்பிழந்த அவர்களின் நிலைகண்டு வருந்தி, அந்நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுத்து குருக்களிடம் சென்று காண்பியுங்கள் (மாற்1:44b),தூய்மையாக்கப்பட்டதை உறுதி செய்து காணிக்கை அளியுங்கள் என கூறுகின்றார். சமுதாயத்தின்

விளிம்பிற்கு தள்ளப்பட்ட மக்கள் மேல் அன்பும், கரிசனையும் கொண்டு அவர்களுக்கு குணமளித்து சமுதாயத்தின் மையத்திற்கு அழைத்துச் செல்கிறார். (மத் 8: 2-4, மாற் 1: 40-45, லூக் 5: 12-14).

### 06. தலைவன் - ஊழியன் உறவுமுறை

அக்கால சமுதாயத்தில் நிலவி வந்த உறவு முறைக்கு மாற்றாக ஒரு புது உறவு முறையை அறிமுகம் செய்கின்றார் இறைமகன் இயேசு. இயேசு தம் சீடர்களுடன் கொண்டிருந்த உறவு முறையே அது. மேல் அறையில் அவர்கள் கொண்டாடிய அந்த இறுதி பாஸ்கா உணவின் போது இதனை அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தினார். இயேசு குனிந்து தம் சீடர்களின் பாதங்களை கழுவி இப்புது உறவு முறையை வெளிப்படுத்தினார் (யோவா 12: 2-15). ஒரு மாற்று கலாச்சார சிந்தனையை இங்கு பதிவு செய்கின்றார். தலைவனுக்கும், சீடனுக்கும் உள்ள உறவை நமக்கு வெளிப்படுத்துகின்றார். அவ்வாறு செயல்பட நம்மையும் அழைக்கின்றார்.

### 07. அன்பே முதன்மை சட்டம்

யூத தலைவர்களான சதுசேயரும், பரிசேயரும் மோசேயின் சட்டத்தை கையில் எடுத்து காணிக்கை, ஆலய வரி வசூலித்தல் என பல முறைகளில் எளிய மக்களை துன்புறுத்தி பணம் சேர்த்தனர். அவர்களின் தேவைகளுக்காகவும், வசதிகளுக்காகவும் சட்டங்களை வளைத்தனர். ஓய்வுநாள் சட்டத்தை குறித்த விவாதம் இயேசுவிற்கும், பரிசேயர்களுக்கும் இடையே நடைபெறுவதை நாம் காண்கின்றோம். (மத் 12: 1-14). இறைமகன் இயேசு பலமுறை இந்த ஓய்வுநாள் சட்டத்தை மீறி மக்களுக்கு குணம் அளிப்பதையும்
விவிலியம் நமக்கு சுட்டிகாட்டுகின்றது. மனிதன் ஏற்படுத்திய இச்சட்டத்தைவிட அன்பே சிறந்த சட்டம் என அன்பை முன்னிறுத்துவதை காண்கின்றோம்.

### 08. மன்னிப்பு



இயேசு நமக்கு மன்னிக்கும் தந்தையை அறிமுகம் செய்து வைக்கின்றார். ஊதாரி மைந்தன் உவமையிலே தன் மகனை மன்னித்து, அவனின் வருகைக்காக எதிர்நோக்கியிருக்கும் தந்தையை நம்முன் படைக்கின்றார். (லூக் 15: 11-32). அவர் தம் சீடர்களுடன் செபிக்கும் பொழுது, தந்தையிடம் மன்னிப்பிற்காக செபிக்கும்படி நமக்கு கற்றுக் கொடுக்கின்றார்.(லூக் 11: 1-4) அவரும் சிலுவையிலே 'இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்' என்று தந்தையிடம் செபிக்கின்றார். (லூக் 23: 32- 43).

## தான் வாழ்ந்த காலகட்டத்திலே புதிய வாழ்வு நெறிமுறையினை வாழ்வாக்கிய நம் சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிப்பத்திரி ஞானம்மாவின் காலடி தடங்கள்

நாம் மகிழ்ந்து போற்றும் நம் சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிப்பத்திரி ஞானம்மா அவர்களின் கால, சமூக, சூழலிலே பெண்கல்வி என்பது ஒரு நிறைவேறா கனவாகவே இருந்தது. அக்கால படிப்பறிவற்ற இளம் பெண்களுடன் தொடர்பு கொண்டு, பெண்களின் வாழ்வு மேம்பட, இச்சமுதாயம் உயர பெண்கல்வியே அடிப்படை தேவை என்பதை உண்ந்து கொண்டார். இவர்களின் இக்கனவு நனவாகிட பெண்களுக்கென்று தனிபள்ளி ஒன்றை கீழச்சேரி மண்ணில் 1863 ஆம் ஆண்டு துவங்கினார். அக்காலகட்டத்திலே பெண்களுக்கென்று தனி பள்ளி என்பது புதிய சமூக நெறி, ஒரு புதிய முன்உதாரணம். தொடர்ந்து நம் சபை முன்னோர்களும் நமது நிறுவுனரின் உள்ளுயிரை முழுமையாக ஏற்றுக்கொண்டு, போக்குவரத்து வசதியற்ற சிறு, சிறு கிராமங்களில் பள்ளிகளை துவங்கினர். அவர்களை தொடர்ந்து வரும் நாமும் நமது நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிப்பத்திரி ஞானம்மாவின் உள்ளுயிர், நமது முன்னோர்களின் நோக்கம், வாழ்வு

நெறி இவற்றை பிரமாணிக்கமாக பின்பற்றி நமது கால சூழலுக்கு ஏற்ப, சமூக சவால்களுக்கு தக்க பதிலளிக்க கடமைபட்டுள்ளோம். அவர்களின் உள்ளத்திலே பற்றி எரிந்த கனல் நம் உள்ளத்திலும் பற்றி எரிய வேண்டும். நமது வாழ்வு முறையிலும், நாம் ஆற்றும் பணியிலும் நமது அன்னையின் உள்ளுயிரை நாம் வாழ்வாக்குகின்றோமா? எளியோர் விளிம்பு மக்களின் சவால்களுக்கு நமது வாழ்வால், பணியால் பதிலளிக்கின்றோமா?

### *கிறிஸ்துவாக மாறுதல் என்பது நற்செய்தி விழுமியங்களுக்கு எதிரான சவால்களை சந்திப்பது*

இன்றைய கால சூழலிலே நம் நாடும் பல்வேறு சமூக சவால்களை எதிர்கொள்கிறது. சாதி பிரிவினை, குழந்தை தொழிலாளி, கல்வியறிவற்ற நிலை, பாலின சமத்துவமின்மை, மூடநம்பிக்கைகள், துறவற போட்டி மனப்பான்மை, இயற்கை மாசுபடுதல், பெண் பாதுகாப்பின்மை, ஊழல், வேலைவாய்ப்பின்மை போன்ற பல பிரச்சனைகளை மக்கள் நாளும் சந்தித்து வருகின்றனர். கட்சிகளும், அரசு சட்டங்களும், நெறிமுறைகளும் கூடுதல் சுமையாக மக்களை நசுக்கி வருவதை காண்கின்றோம். நம் ஜனநாயக நாட்டிலே அரசின் இந்துத்துவா கொள்கைகள் வலிமையாக விதைக்கப்படுவதை அறிவோம்.

நமது துறவற சூழலை உற்று நோக்குகையில் கட்சி அரசியல் தாக்கத்தைவிட மிகப்பெரிய சவால்கள் நம்மிடையே இருப்பதை உணர்கின்றோம். ஒற்றுமை இழந்த குழுமங்கள், நுகர்வு கலாச்சார மிகுந்த வாழ்வுமுறை, உலக போக்கு நிறைந்த துறவற இல்லங்கள், ஈடுபாடற்ற பணிவாழ்வு, இறமையற்ற, ஆன்மீகம் இழந்த வாழ்வுமுறை போன்றவைகள் நம்மிடையே ஊடுருவி இருப்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. இந்நிலை தொடருமேயானால் நற்செய்தி மதிப்பீடுகளுக்கு நாமோ, நமது வாழ்வோ ஒரு தடைக்கல்லாக மாறிவிடும். நம்மிடம் சமூக மாற்றத்தினை தேடும் மக்களுக்கும், திருஅவைக்கும் நாம் பயனற்றவர்களாக, தகுதியற்றவர்களாக மாறிவிடுவோம்.

### *நமது வாழ்விலும், பணியிலும் புதிய நெறிமுறைகளை பின்பற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது*

நமது சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிப்பத்திரி ஞானம்மாவின் உள்ளுயிரை மீண்டும் மீண்டும் தரிசித்து நமது வாழ்வையும், பணிகளையும் மறுசீரமைத்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. நாம் பட்டியலிட்ட இன்றைய வாழ்வின் யதார்த்தங்கள் நமது துறவற வாழ்வையும் பாதிக்கிறது. இதன் பாதிப்பாக நாம் நமது அழைப்பு, நன்நெறிகள், உளவியல், ஆன்மீகம் மற்றும் பணிகள் என அனைத்து நிலைகளிலும் ஒரு தடுமாற்றத்தை உணர்கின்றோம். நமது சபை நிறுவுனருடன் இணைந்து குறுகிய, இறுகிய நிலைகளை கடந்து, காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப, சபை விடுக்கும் சவால்களுக்கு பதிலளிக்க அழைக்கப்படுகிறோம். நமது வாழ்வு குறிப்பிட்ட நெறிமுறைகளுக்குள், பழக்கவழக்கங்களுக்குள் பின்னப்பட்டுள்ளது. இவைகளை மறுபரிசீலனை செய்யவும், ஆய்வுக்கு உட்படுத்தவும் நாம் சிந்திப்பதில்லை. மாறிவரும் காலச்சூழலுக்கு ஏற்ப கிறிஸ்துவின் விழுமியங்களை நமது வாழ்வில் நிலை நாட்டிட, நமது அழைப்பையும், நமது குழும வாழ்வையும் மற்றும் பணிகளையும் மறுபரிசீலனை செய்வோம். இந்த காலகட்டத்திலே கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி புதிய வாழ்வு நெறிமுறைகளை நம் வாழ்வில் புகுத்துவோம்.

- சமுதாய மேம்பாட்டிற்கான பணியில் நம்மை ஈடுபடுத்துவோம்.
- நமது வாழ்வை பொருத்தமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுவோம்.
- புதிய அணுகுமுறைகளால் நமது பணிகளில் புதுமையை பாய்ச்சுவோம்.
- இறைவனை மக்களில் கண்டு கொள்ள அவர்களின் வாழ்வு நிலை உயர பாடுபடுவோம்.
- விளிம்பு நோக்கி பயணிக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்ற நமது பணிக்கான அழைப்பை அடிக்கடி புதுப்பித்துக் கொள்வோம்.

*குழும விவாதத்திற்கு*

01. புதிய வாழ்வு நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளுதல் காலத்தின் கட்டாயம். சமூக மாற்றத்தின் கருவியாக நாம் எவ்வாறு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவது என விவாதிப்போம்.

02. புதிய வாழ்வு நெறிமுறைகள் (New Paradigm shift) நமது துறவற வாழ்விலும், பணிவாழ்விலும் தேவை - அவசர தேவை விவாதிப்போம்.

03. நமது வாழ்வுமுறையும், பணியும் பொருத்தமுள்ளதாக மாற்ற, நாம் செய்ய வேண்டிய மாற்றங்கள் எவை? இதில் உடனடியாக செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன?

## SUPERIOR GENERAL'S PROGRAMME

**25.08.2023 - 22.09.2023 (Visitation)**

**Italy**

1. Besnate
2. Civate

**Germany**

1. Angelturn
2. Bermersbach (New Convent)
3. Bretten
4. Gerlachsheim
5. Leutershausen

**Spain**

1. Novillas